JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

**Deposition of - PW- 1 Witness**
**for Prosecution**

STC No. 236/2023 Crime No. - Station -

| | | | |
|---|---|---|---|
| Name | Pw–1– கேசவராஜன் | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 18th day of July 2025 | | | |

**எதிரி ஆஜர்.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் என்ன படித்துள்ளேன் என்றால். 12ம் வகுப்பு வரை ப படித்துள்ளேன். நான் என்ன வேலை செய்து கொண்டு வருகிறேன் என்றால், சிமெண்ட் கடை வைத்து நடத்தி வருகிறேன். நான் எனது புகார் சட்ட அறிவிப்பு மற்றும் முதல் விசாரணையில் நான் சிமெண்ட் கடை வைத்து நடத்தி வருவதை குறிப்பிட்டு கூறவில்லை என்றால், சரிதான். மனுவில் உள்ள விவரங்கள் அனைத்தும் நான் படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன் என்றால், சரிதான்.

எனது வருமானம் பற்றி எனது சட்ட அறிவிப்பிலோ, புகாரிலோ அல்லது முதல் விசாரணையிலோ கூறவில்லை என்றால், சரிதான். எதிரியை எனக்கு எப்படி தெரியும் என்றால், எதிரி எனது கடைக்கு அடிக்கடி வந்து செல்வதன் மூலம் பழக்கம். எதிரியை எனக்கு எத்தனை வருடங்களாக தெரியும் என்றால், 6 வருடங்களாக தெரியும். எதிரியை எனக்கு முதன் முதலில் எப்படி தெரியும் என்றால், அவர் எனது கடையில் சிமெண்ட் வாங்குவதற்காக வருவதன் மூலம் தெரியும். எதிரி வாங்கிய சிமெண்டுக்கு இரசீது கொடுத்தேனா என்றால், கொடுக்கவில்லை. எதிரியை எனக்கு தெரியாது என்றும், இந்த வழக்கிற்காக எதிரி எனது கடைக்கு வந்து சிமெண்ட் வாங்கினார் என்றும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

எதிரி என்ன வேலை செய்து வருகிறார் என்றால், விவசாயம் செய்து வருகிறார். பவானிக்கும், எதிரி குடியிருக்கும் எண்ணமங்கலம் என்கிற ஊருக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால், சுமார் 30 கிலோ மீட்டர் இருக்கும். நான் எத்தனை முறை எதிரி வீட்டிற்கு சென்று வந்துள்ளேன் என்றால், நான் எதிரி வீட்டிற்கு சென்றதில்லை. நான் பணத்தை யார் முன்னிலையில், எங்கு வைத்து எதிரிக்கு

கொடுத்தேன் என்றால், எதிரி எனது வீட்டிற்கு 10.00 –11.00 மணிக்குள் வந்து வாங்கிச் சென்றார். ம.சா.ஆ.1 காசோலையில் கையெழுத்தும், கையொப்பமும் வெவ்வேறு பேனாக்களில் எழுதப்பட்டுள்ளது என்றால், சரிதான். ம.சா.ஆ.2 ல் உள்ள கையொப்பமும், ம.சா.ஆ.1 ல் உள்ள கையொப்பமும் வெவ்வேறு மாதிரியாக உள்ளது என்றால், சரிதான். காசோலையானது கையெழுத்து மாறுபட்டுள்ளது என்ற காரணத்திற்காகத்தான் திருப்பப்பட்டுள்ளது என்றால், சரிதான். காசோலையை இந்நீதிமன்றத்தின் மூலம் கைரேகை நிபுணருக்கு கையெழுத்து ஆய்வு செய்ய எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்றால், சரிதான்.

எனக்கு சோமாட்சி கவுண்டர் என்பவரை தெரியுமா என்றால், எனக்கு தெரியாது. சோமாட்சி கவுண்டர் மகன் சரவணனுக்கும், எதிரிக்கும் பழக்க வழக்கம் இருந்ததை தெரிந்து கொண்டேனா என்றால், அதைப் பற்றி எனக்கு தெரியாது. சோமாட்சி கவுண்டர் மகன் சரவணனுக்கும், எதிரிக்கும் தான் வரவு செலவு இருந்தது என்றால், சரியல்ல. எதிரிக்கும், எனக்கும் எந்த சூழ்நிலையிலும் வரவு செலவு இல்லை என்றால், சரியல்ல. எதிரி கேட்டு 10 நாட்களில் பணம் கொடுக்கும் அளவிற்கு எனக்கு வசதி வாய்ப்பு இல்லை என்றால், சரியல்ல. எனக்கு, எதிரிக்கு பணம் கொடுக்கும் அளவிற்கு வசதி, வருமானம் இருந்திருந்தால் நான் எனது புகார், சட்ட அறிவிப்பு மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் கூறியிருப்பேன் என்றால், சரியல்ல.

எதிரி, சோமாட்சி கவுண்டர் மகன் சரவணனிடம் தொகை எதுவும் நிரப்பாமலும், கையொப்பம் எதுவும் செய்யாமலும் கொடுத்த வெற்றுக் காசோலையை நான் சோமாச்சி கவுண்டரிடம் பெற்று மோசடியாக எதிரியின் கையொப்பமிட்டு பண விவரங்களை நிரப்பி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியில்லை. எதிரிக்கு பணம் எப்படி (Denomination) கொடுத்தேன் என்றால், 500 ரூபாய் தாள்களாக கொடுத்தேன். எதிரி பணம் வாங்கும்போது என்னுடன் யார் இருந்தார்கள் என்றால். நான் மட்டும்தான் வீட்டில் இருந்தேன். நான் எதிரிக்கு சட்ட அறிவிப்பு அனுப்பியதை தெரிந்து கொண்ட எதிரி எனது வீட்டிற்கு வந்து எனது அம்மா அப்பா மனைவியிடம் என்னை யார் என்றே தெரியாது என்று கேட்டார் என்றால், சரியல்ல. காசோலை திருப்பப்பட்டது குறித்து எதிரிக்கு தகவல் சொன்னேனா என்றால், தகவல் எதுவும் சொல்லவில்லை.

இதற்கு முன்பு எதிரிக்கும், எனக்கும் எந்த வரவு செலவு இல்லை என்றால், சரியல்ல. எதிரி எனக்கு எப்படி பழக்கம் என்று எனது சட்ட அறிவிப்பிலோ, புகாரிலோ மற்றும் பிரமாண வாக்குமூலத்திலோ குறிப்பிட்டு கூறவில்லை என்றால், சரிதான். எதிரி, என்னிடம் 02.12.2022 பணம் கேட்ட தேதியிலிருந்து 14.12.2022 ம் தேதி வரை எனக்கு பணம் ரூ.5,00,000/– வந்ததற்கான ஆவணம் ஏதும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். காசோலை திருப்பப்பட்டது குறித்து எதிரியிடம் எப்போது நேரில் சென்று கேட்டேன் என்றால், தற்போது எனக்கு ஞாபகம் இல்லை.

எதிரியின் தொலைபேசி எண் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை தொலைபேசியில் உள்ளது. ( சாட்சி அவரது தொலைபேசியை பார்த்து எதிரியின் தொலைபேசி எண் இல்லாததால் டைரியில் உள்ளது என்று மாற்றி கூறுகிறார்).

எதிரிக்கு கொடுத்ததாக சொல்லப்படும் தொகைக்கு வட்டி எதுவும் பேசப்படவில்லை என்றால், சரிதான், அவர் கைமாற்று கடனாக தான் வாங்கினார். எதிரிக்கு கொடுத்ததாக சொல்லப்படும் தொகையை நான் எங்கிருந்து எடுத்து கொடுத்தேன் என்றால், நான் கையில் வைத்திருந்த தொகையை தான் கொடுத்தேன். நான் எதிரியை போன்று வேறு எத்தனை நபர்கள் மீது இந்த நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், சுமார் 10 பேர்கள் இருப்பார்கள். இதேபோல் ஈரோடு குற்றவியல் விரைவு நீதிமன்றத்தில் சுமார் 25 நபர்கள் மீது காசோலை வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல.

நான் எடுத்துக் கொடுத்த தொகையை எனது வருமான வரி கணக்கில் காட்டியுள்ளேனா என்றால், காட்டவில்லை. நான் கொடுத்த நபர்கள் அனைவரிடமும் கைமாற்று கடனாக தான் பணம் கொடுத்தேன் என்றால், சரிதான் நான் பல முக்கிய பிரமுகர்களுக்கு பினாமியாக இருந்து வருகிறேன் என்றால், சரியல்ல. நான் வியாபாரம் செய்து வரும் நிறுவனத்தில் வருடா வருடம் தனித்தனி பதிவேடுகள் வைத்து பதிவு செய்து வருகிறேன் என்றால், சரியல்ல. அந்த பதிவேட்டில் எதிரிக்கு கொடுத்த பணத்தை பதிவு செய்துள்ளேனா என்றால், பதிவு செய்யவில்லை. நான் தாக்கல் செய்த அனைத்து வழக்குகளும் நிறுவனத்தை தரப்பினர்களாக சேர்க்காமல் தனி நபராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான்.

எதிரிக்கும், எனக்கும் எந்த சூழ்நிலையிலும் பழக்க வழக்கம் இல்லை என்றாலும், வரவு செலவு இல்லை என்றால், சரியல்ல. நான் சோமாட்சி கவுண்டரிடம் வெற்றுக் காசோலையை பெற்று எதிரியின் கையொப்பமிட்டு இவழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. நான் உண்மையாகவே எதிரிக்கு பணம் கொடுத்திருந்தால் அதனை எனது வருமான வரி கணக்கில் காட்டியிருப்பேன் என்றால், சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால், சரியல்ல.

**Signature of Witness**

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2025.07.18 18:48:30 +0530